<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

<u>அசல் வழக்கு எண். 59/2024</u>

பெயர் : பாலமுருகன் P.W.1. (Cross)

த/பெ. : சஞ்சீவி ராவ்

தேதி : 16.10.2025

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 18 குழி ஆகும். தாவா சொத்தில் மாடி வீடு உள்ளது. நான் தாவா சொத்தை கிரயம் பெறும் போது வீடு இருந்ததா என்றால் இல்லை. காலி மனையாக தான் வாங்கினேன். நான் தாவா வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தின் புலஎண் எனது கிரய பத்திரத்திலும் FMB மற்றும் பட்டாவி லும் வேறு வேறாக உள்ளது என்பதால் அவற்றை திருத்தம் செய்யகோரி தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சரியான புல எண்.59/4C மற்றும் 59/4D ஆகும். நான் பிழை திருத்த பத்திரம் பதிவு செய்ய சார் பதிவாளர் அலுவகத்தை அனுகினேன் என்றால் பல முறை அனுகினேன். நான் பிழைதிருத்த பத்திரம் தயார் செய்வதற்கு முன்னர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கேட்டேன் அவர்கள் கால வரையறை முடிந்துவிட்டதால் செய்ய இயலாது என கூறினார்கள்.